THE HINDU (TAMIL)

30 JULY 2021

PAGE 3

புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்துக்கு

# ரூ.2.87 கோடியில் புதிய அறிவியல் தொழில் நுட்பக் கருவி

■ புதுச்சேரி

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புதிதாக நிறுவப்பட்ட ரூ.2.87 கோடி மதிப்பிலான புதிய அறிவியல் தொழில் நுட்பக் கருவியை துணைவேந்தர் இயக்கி வைத்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடுவண் கருவி மயமாக்கல் மையம் செயல்பட்டுவருகிறது. இம்மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிற உலகத் தரத்திலான நவீன தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி முனைவர் பட்ட மாணவர்கள் பல்வேறு நவீன ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.




▲ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடுவண் கருவி மயமாக்கல் மையத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் நவீன ஊடுகதிர் மின் அணு நிறமாலை அளவீட்டு தொழில் நுட்பக் கருவி.

அதன் ஒரு பகுதியாக, மத்திய அரசு அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, பல்கலைக்கழக அறிவியல், ஆராய்ச்சி மற்றும் அறிவியில் மேம்பாட்டுத் திட்ட நிதி உதவியோடு ரூ. 2.87 கோடி மதிப்பிலான நவீன ஊடுகதிர் மின் அணு நிறமாலை அளவீட்டு தொழில் நுட்பக் கருவி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மாணவர்களுக்காக இதைப் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் நிகழ்வு நடுவண் கருவி மயமாக்கல் மைய ஆராய்ச்சிக் கூடத்தில் நடந்தது.

மையத்தின் தலைவர் பேராசிரியர் பால.மணிமாறன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் இரவி காந்த் குமார் மற்றும் உயிர் தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் துறைப் பேராசிரியர் சுரேஷ் பாபு முன்னிலை வகித்தார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கருவியை ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், " வேதியியல் பகுப்பாய்வுத் துறையில் பெரும் பயனைத் தரக்கூடிய புதிய நவீன தொழில் நுட்பக் கருவியைப் பயன்படுத்தி மாணவர்களும் பேராசிரியர்களும் உலகத் தரத்திலான ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்.

இந்தக் கருவியைப் பயன்படுத்தி தனிமங்களின் காற்று நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை எளிதல் கண்டறிய முடியும்.

இதனை வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் உயிரியல் துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் நோக்கம் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதே; மாணவர்கள் அனைவரும் ஆராய்ச்சிக் கூடங்களில் ஆர்வத்துடன் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

DINATHANTHI

30 JULY 2021

PAGE 5



ரூ.2 கோடியில் தொழில்நுட்ப கருவி ஒப்படைப்பு:

# ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதே பல்கலைக்கழகத்தின் நோக்கம்

## துணைவேந்தர் குர்மீத்சிங் பேச்சு

புதுச்சேரி, ஜூலை.30-

புதுவை பல்கலைக்கழகத்துக்கு மத்திய அரசு அறிவியல், தொழில் நுட்பத்துறை மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக அறிவியல் ஆராய்ச்சி, அறிவியல் மேம்பாட்டுத் திட்ட நிதி உதவியோடு ரூ.2 கோடியே 7 லட்சம் மதிப்பில் நவீன ஊடு கதிர் மின்அணு நிறமாலை அளவீட்டு தொழில்நுட்ப கருவி வாங்கப்பட்டுள்ளது.

இதனை ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி ஆராய்ச்சி கூடத்தில் நடந்தது. மையத்தின் தலைவர் பால.மணிமாறன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் ரவி காந்தகுமார், உயிர் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துறை பேராசிரியர் சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்து கொண்டு புதிய ஆராய்ச்சி கருவியை மாணவர்களின் பயன்பாட்டுக்காக ஒப்படைத்தார்.

பின்னர் அவர் பேசுகையில், வேதியியல் பகுப்பாய்வு துறையில் பெரும் பயனை தரக்கூடிய புதிய நவீன தொழில்நுட்ப கருவியை வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் உயிரியல் துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தி கொள்ளவேண்டும். ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதே பல்கலைக்கழகத்தின் நோக்கம் என்பதால் மாணவர்கள் அனைவரும் ஆராய்ச்சி கூடங்களில் ஆர்வத்தோடு ஆய்வு செய்யவேண்டும் என்றார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சி துறை மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

DINAMALAR

30 JULY 2021.

PAGE 11

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 'கல்விச் சுவரொட்டி' வெளியீடு

**புதுச்சேரி, ஜூலை 30–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளும் 'கல்விச் சுவரொட்டி' வெளியிடப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக்கழகம், 2021 22ம் கல்வியாண்டில் தொழில் சார்ந்த பல்வேறு புதிய படிப்புகளை அறிமுகம் செய்துள்ளது.

நடப்பாண்டில் வழங்க உள்ள முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த விவரங்கள், இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை, உதவித்தொகை குறித்து தெரிந்து கொள்ள, கல்விச் சுவரொட்டி வெளியிடப்பட்டது.

துணைவேந்தர் குர்மீத் சிங் சுவரொட்டியை வெளியிட்டார். அந்தமான் நிகோபார் தீவுகளுக்கான பல்கலைக்கழக மைய பொறுப்பதிகாரி ராஜ்குமார் உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டனர்.



■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த விவரங்களை அறிந்துகொள்ளும் 'கல்விச் சுவரொட்டியை துணைவேந்தர் குர்மீத் சிங் வெளியிட்டார்

துணைவேந்தர் குர்மீத்சிங் பேசுகையில், 'மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு புதிய தொழில் மற்றும் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பாடத்திட்டங்கள் அந்தமான், லட்சத் தீவுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற மாணவர் சேர்க்கையை அதிகரிக்க, நாட்டின் அனைத்து கல்லூரிகள், உயர் கல்வி நிறுவனங்களுக்கு, இந்த சுவரொட்டி அனுப்பி வைக்கப்படும்' என்றார்.

DINAMALAR

30 JULY 2021.

PAGE 9

# PONDICHERRY UNIVERSITY
## ENGINEERING WING

No.PU/EW/Tender/2021-22 Date: 28.07.2021

### NOTICE INVITING TENDER

For and on behalf of Pondicherry University, the Executive Engineer (oc), Engineering wing, Pondicherry University invites sealed item rate tenders from the eligible contractors for the works of:

1) **Annual maintenance and special repairs to F-1, F-2, F-10, F-14, F-15, F-32, F-34, F-35, F-39 and F-40 quarters building.**
   **Estimate cost: Rs. 4,42,518/-**
2) **Providing patch work on road surface at various locations in the Pondicherry University campus( From Vinayagar temple to library annexure building, SOM junction to old DMS building, way to service building and in-front of the administrative block upto rear side of administrative block)**
   **Estimate cost: Rs.18,49,151/-**
3) **Post constructional anti termite treatment and special repairs at Physical Education building**
   **Estimate cost: Rs. 2,38,050/-**
4) **Maintenance to the academic complex building gents hostel**
   **Estimate cost: Rs. 7,47,287/-**
5) **Renovation to toilets at Pavendar Bharathidasan Gents hostel**
   **Estimate cost: Rs. 9,75,631/-**

The tender forms and other details may be downloaded from website **www.pondiuni.edu.in**

**EXECUTIVE ENGINEER (OC)**